දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපෑල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
Website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
**SUWASIRIPAYA**

මගේ අංකය )
எனது இல. )
My No. ) CF/EXU/06/2022

ඔබේ අංකය )
உமது இல. )
Your No. )

දිනය )
திகதி ) 2022/10/07
Date )

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

பொது சுற்றுநிருப கடித இலக்கம் :- 02 – 87/ 2022

மாகாண சுகாதார செயலாளர்கள்
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தேசிய வைத்தியசாலை
பணிப்பாளர்- தேசிய வைத்தியசாலை - கண்டி
மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்
பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
உரிய நிறுவனத் தலைவர்கள்

**சுகாதார அமைச்சில் (MT- 06) சம்பள அளவுத்திட்டத்திற்குரித்தான துணை மருத்துவ சேவை II "ஆ" பிரிவு / தரம் III சுகாதார பூச்சியியல் உதவியாளர்களின் பொருட்டான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2022 (முதலாவது தடவை)**

துணைமருத்துவ சேவையில் II "ஆ" பிரிவு / தரம் III சுகாதார பூச்சியியல் உதவியாளர்கள் II 'ஆ' பிரிவு / தரம் III ற்கு தரமுயர்த்தப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய வினைத்திறமை காண் தடைப் சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தாள் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் திகதி, இடம் மற்றும் நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

**02 தகைமைகள்**

சுகாதார பூச்சியியல் உதவியாளர்கள் II 'ஆ' பிரிவு / தரம் III ற்கு தரமுயர்த்தப்பட்டு இதுவரையிலும் பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**03 விண்ணப்பங்கள்**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு "சுவசிரிபாய" , இலக்கம் - 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு **2022/11/09** ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர **"தரம் III சுகாதார பூச்சியியல் உதவியாளர்களின் பொருட்டான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2022 (முதலாவது தடவை)"** எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். **வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பதாரி சகல தகைதைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதை தனிநபர் கோவைகளை பேணும் உத்தியேகைத்தரும் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என திணைக்கள தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும்.** தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா. 110.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9" × 4") கடித உறைகள் 01 இனையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ,அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். **விண்ணப்ப முடிவுத்திகதித்திக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.**


385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

*விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 - 09 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.*

## 04 பரீட்சைக் கட்டணம்

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

## 05 பரீட்சையின் பொருட்டு உட்படுத்திக் கொள்ளுதல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை
(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) செல்லுபடியான கடவுச் சீட்டு

## 06 பரீட்சை திட்டம்

வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையானது தாபனவிதிக்கோவையும் நடைமுறை விதி மற்றும் நிதிப்பிரமாணங்கள் எனும் இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தியடைவதன் பொருட்டு ஒவ்வொரு பிரிவிற்கு ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். காலம் 03 மணித்தியாலம். முதன் முறையாக பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் அனைத்து விடயங்களுக்கும் விண்ணப்பிக்க வேண்டும்.

## 07 பரீட்சை பாடத்திட்டம்

### 7.1 தாபன விதிக்கோவையும் நடைமுறை விதி வினாத்தாள்

கட்டுரை வடிவிலான வினாக்கள் 08 இனைக் கொண்டமைந்துள்ளதுடன் அவற்றில் விரும்பிய ஏதாவது 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

- **பின்வரும் அத்தியாயங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளைத் தழுவி அமைக்கப்படும்**

| | | | |
|---|---|---|---|
| IV | அத்தியாயம் | - | மாதச் சம்பளம், தற்காலிக தகுதிநிலை, நிரந்தரத் தகுதிநிலை, ஓய்வூதிய உரிமை ஆகியவற்றை வழங்கல் |

- **பின்வரும் அத்தியாயங்கள் தாபன விதிக்கோவையினைத் தழுவி அமைக்கப்படும்**

| | | | |
|---|---|---|---|
| XII | அத்தியாயம் | - | விடுமுறை |
| XIII | அத்தியாயம் | - | புகையிரத ஆணைச்சீட்டு |
| XIV | அத்தியாயம் | - | உள் நாட்டில் கடமைப் பிரயாணங்கள் |
| XIX | அத்தியாயம் | - | அரச இல்லங்கள் |
| XLVII | அத்தியாயம் | - | சாதாரண நடைமுறைகளும் ஒழுக்கங்களும் |
| XLVIII | அத்தியாயம் | - | ஒழுக்காற்று நடைமுறை விதிகள் |

7.2 நிதிப்பிரமாண வினாப்பத்திரம்

கட்டுரை வடிவிலான 08 வினாக்களைக் கொண்டுள்ளது. அதில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| I | அத்தியாயம் | - | செலவினம், வருமான மதிப்பீடு, திரட்டு நிதியம், வருடாந்த மதிப்பீடுகள், வருடாந்த மதிப்பீடு மாற்றம், (நி.பி. 01 – 68 வரை) |
| III | அத்தியாயம் | - | நிதி முகாமையும் வகைகூறும் தன்மையும், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், வருமானக் கணக்கு உத்தியோகத்தர், கொடுப்பனவுக்கான அதிகாரம், அங்கீகாரம், உறுதிப்படுத்தல், செயற்பாடுகளை கையளித்தல் (நி.பி: 124 - 147 வரையானது) |

**08** பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**09** தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உங்களது நிறுவனத்தில் கடமையாற்றும் அனைத்து பாடசாலை பல் சிகிச்சையாளர் சேவையில் வகுப்பு II 'ஆ' பிரிவு / தரம் III உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஒழுங்கினை மேற்கொள்ளவும். இந்த விபரங்களை www.health.gov.lk என்னும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இணையத்தில் பார்வையிடும் வழி :

**Web Path: - www.health.gov.lk ⟶ Staff Access ⟶ Admin ⟶ Circulars**

**கவனிக்கவும் (சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்றுநிருபங்களுக்கிடையே ஏதாவது ஒவ்வாமைகள் காணப்படுமாயின் சிங்கள மொழியிலான சுற்றுநிருபமே வலுவுடையதாகும்.**

Chamod

சாமிக எச் கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் ( நிர்வாகம் ) II
செயலாளருக்காக,
சுகாதார அமைச்சு

Chamika H. Gamage
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.



385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

**EXU**

| |
|---|
| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |

## மாதிரி விண்ணப்பப் படிவம்

<u>சுகாதார அமைச்சில் (MT- 06) சம்பள அளவுத்திட்டத்திற்குரித்தான துணை மருத்துவ சேவை II "ஆ" பிரிவு / தரம் III சுகாதார பூச்சியியல் உதவியாளர்களின் பொருட்டான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2022(முதலாவது தடவை)</u>

01 (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில்) :

........................................................................................................................

........................................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (தமிழில்) : .......................................

........................................................................................................................

(iv) முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) முதல் நியமனத் திகதி : ..................................................................................

(ii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம்: ..........................................................................

(iii) தொலைபேசி இல:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

(iv) தேசிய அடையாள அட்டை இல :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

(v) மின்னஞ்சல் முகவரி : ..................................................................................

02 நீங்கள் இம்முறை தோற்ற விரும்பும் விடயங்களின் முன்னால் உள்ள பெட்டியில் ✓ அடையாளம் இடுக. தோற்ற விரும்பாத பாடங்களுக்கு முன்னால் உள்ள பெட்டியில் ✗ அடையாளம் இடுக.

தாபன விதிக்கோவையும் நடைமுறை விதி ☐ நிதிப்பிரமாணம் ☐

03 (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம் : ..................................................................................

(ஆ) அந்நிறுவம் சொந்தமாவது: மத்திய அரசிற்கு ☐

மாகாண சபைக்கு ☐

(இ) மாகாண சபையாயின் அதற்குரிய மாகாணம் : ..................................................................................

(ஈ) அது சொந்தமாகும் மாவட்டம்: ..................................................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9"x4" அளவு ரூபா.110.00 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை **<u>ஒன்று</u>** இணைக்கப்பட்டு உள்ளதா? ..................................................................................

(ஊ) தபால் முகவரி (தமிழில்) : ..................................................................................

(உ) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்) : ..................................................................................

........................................................................................................................

04 பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ..................................................................................

05 (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? .................................................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இம்முறை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா?

| முத்திரைக் கூண்டு |
|---|
| |

06 **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா................ பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும் இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார திணைக்களத்தினால் பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி : .............................  .............................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

07 **சுயவிபரக் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், தரம் 111 ற்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : .............................  .............................................

பெயர் மற்றும் கையொப்பம்

08 **திணைக்களத் தலைவரின் கையொப்பம்**

திரு/திருமதி/செல்வி* ............................................ என்பவர் ................................ உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகிறார். என்றும் அவ் உத்தியோகத்தர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையென்பதால்/முதன்முறை அல்லாததால்* ரூபா................. பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரை ஒட்ட அவசியமில்லை* எனவும் விண்ணப் பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகைமை உள்ளதெனவும் எனது முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ..............................  .............................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

09 **பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவின் தலைவரின் உறுதிப்படுத்தல்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் ............................................ என்பவர் எனது நிறுவனத்தில் பாடசாலை பல் சிகிச்சையாளர் சேவையில் வகுப்பு II 'ஆ' பிரிவு / தரம் III உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்னும், வி ண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூத்தி செய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ................................  ....................................................

பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவு
தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

* தேவையற்றவற்றினைக் கீறிவிடவும்.